www.tamilarangam.net

ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம்
EELAM PEOPLE'S INFORMATION CENTRE

B.M. BOX 1738,
LONDON WC1N 3XX,
U.K.

POST BAG 5551,
MADRAS - 600 094,
INDIA.

## மட்டக்களப்பு படுகொலை

மட்டக்களப்பின் 'கொக்கட்டிச் சோலை' என்னும் இடத்தில் போராளிகளுக்கும் அதிரடிப்படையினருக்கும் இடையில் நீண்ட மோதலின் தொடர்ச்சியாக அதிரடிப்படையினர் ஒரு இயக்கத்தின் மீதும், அப்பாவி மக்கள் மீதும் பாரிய அளவிலான தாக்குதல் மேற்கொள்ளும் போது ஏனைய இயக்கங்கள் மக்களைப் பாதுகாக்க முடியாமல் போனது வேதனைக்குரிய விடயமாகும். ஆனால் இந்நிலை ஏற்படக் காரணம் என்ன என்பதை அவதானிக்க வேண்டியது எமது கடமையாகும்.

1985ம் ஆண்டு யாழ் குடா நாட்டில் 'அரியாலை' 'சுதுமலை' ஆகிய இடங்களில் ஒரு விடுதலை இயக்கத்தின் முகாம் இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்ட போது ஏனைய சகல இயக்கங்களின் ஒத்துழைப்பினால் ஒரேயொரு உயிர்ச்சேதத்துடன் மட்டும் இராணுவம் பின்வாங்கியதை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆனால் இன்றைய இயக்கங்களின் நிலை மக்களை ஈழப்போராட்டத்தின் மீது விரக்தியடைய வைப்பதுடன், வெறுப்பையுமே ஏற்படுத்துகின்றது. இன்று இயக்கங்கள் ஈழத்தில் பரவலாக ஒரு குறிப்பிட்ட இயக்கம் இருக்குமிடத்தை விட்டு வேறு இடங்களில் இருந்தே இயங்கி வருகின்றார்கள். ஒற்றுமையின் அவசியத்தை அவ்வியக்கம் உணரும் வரை இந்நிலை தொடரத்தான் போகின்றது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) ஐப் போன்று தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு தெளிவான பார்வையுள்ள எந்த இயக்கமும் பொது எதிரியினால் தமது சக இயக்கங்களுக்கு ஆபத்து நேரும்போது அவர்களைக் காப்பாற்ற முயற்சியை எடுப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு முற்பகுதியில் மட்டுநகரில் நடந்த படுகொலையின் போது EPRLF ன் மக்கள் விடுதலைப் படை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனக்கு 1986ம் ஆண்டு முற்பகுதியில் யாழ்குடா நாட்டில் இராணுவம் தாக்கியதன் தொடர்பாக யாழ் கோட்டை முகாமைத் தாக்கச் சென்றபோது பிறதொரு இயக்கத்தினர் தோழர் அமீன் சுட்டுக்கொல்லப்பட்ட அனுபவம் இருந்தும் அதைப் பொருட்படுத்தாது தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குக் கைகொடுக்கச் சென்றார்கள், ஆனால் ஏற்கனவே அக்குறிப்பிட்ட இயக்கத்தின் முரண்பாட்டால் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து பல மைல்களுக்கு அப்பால் இருந்ததினால் அவ்விடத்திற்கு வந்து சேர முடியவில்லை. காரணம் மட்டுநகர், யாழ்குடா நாட்டைப் போலல்லாது ஒரு பரந்துபட்ட பிரதேசம் அத்துடன் கூலிப்படைகளும் தங்கள் முகாம்களை ஒவ்வொரு இரு மைல் தொலைவிலும் அமைத்துள்ளார்கள். இவர்காரது பல இராணுவ - பொலிஸ் கூட்டு முகாம்களை கடந்து குறிப்பிட்ட இடத்தை வந்தடைய முடியவில்லை.

இதேவேளை கூலிப்படைகளின் மீதான ஒரு மோதல் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் ஏற்படுத்துவதன் மூலம் ஓர் பாரிய வெற்றியை அடையக்கூடிய வாய்ப்பு இருந்திருக்குமானால் நிச்சயம் மக்கள் விடுதலைப் படை ஏனைய பகுதிகளிலும் கூலிப்படைகளுடன் ஒரு மோதல் உருவாக்கி இருக்கும். ஆனால் இன்று இயக்கங்களுக்கிடையிலுள்ள முரண்பாட்டினால் ஒத்துழைப்பு இல்லாத நிலையிலேயே ஈழப் போராட்டம் இருக்கின்றது. இந்நிலையில் மக்கள் விடுதலைப் படையும் தாக்குதலைப் பரவலாக்கியிருந்தால் அதனால் பாதிக்கப் படுபவர்கள் அப்பாவிப் பொதுமக்களாகத்தான் இருந்திருக்கும்.

மட்டுநகரில் நடந்த இச்சம்பவம் எதிர்வரும் காலங்களில் ஆவது இயக்கங்கள் ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்து செயல்படுவதற்கு வழிகோலாகக் கருதி தமது பொது எதிரி யார் என்பதை அடையாளம் கண்டு கொள்ளும் அளவிற்குத் தமது அரசியல் பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இலண்டன்,
6-2-87.